ராதாவும்

ராமாயணமும்

இரா. பழனிச்சாமி.

N64.
177580

ராதாவும் -
- ராமாயணமும்

எழுதியவர்

இரா. பழனிச்சாமி.

விநியோகஸ்தர் ;-

M. அழகர்,

ராணி பதிப்பகம்,

1/154, சங்கிலியாண்டார்புரம் திருச்சி.

பாரதி அச்சகம், குடந்தை.

என்னுரை

இதிகாசம் இறைவனின் வரலாறு. பழமை யென்றாலும் பகவானின் வாழ்க்கையை அது வரையறுத்துத் தருகிறது என்ற எண்ணம் மனித இதயத்தில் ஆழமாக ஊன்றிப் போன ஒரு நச்சுக் கொள்கை. ராமாயணமா? நீதிக்கதை! அதிலே சத்தியம் சதிராடுகிறது! அறம் அதன் முழு உருவம். கற்பென்றால் அதற்குச் சரியான பொருள்காண சீதையின் வாழ்க்கையையல்லவா படிக்கவேண்டும். மகாபாரதத்தைப் படித்தாலல்லவா கற்பின் மகத்துவத்தைப் புரிந்துகொள்ளமுடியும் இறைவனின் அவதாரங்களென்ன. அவனின் திருவிளையாடல்களிலே பொதிந்திருக்கும் தெய்வீகத்தன்மை யென்ன. இவ்வளவும் உழைக்காமல் வாழும் ஒரு இனத்தின் உரிமைக்குரல்!

அந்தக் குரல்! பயங்கரக்குரல்! சாத்திரத்தைக் காட்டி ஜாதி முறை வகுத்து திராவிடர்கள் வாழ்விலே பேதநிலையை உண்டாக்கிய ஓர் அபாயக்குரல். வேதாந்தம்பேசி. ஓங்காரம் பாடி திராவிடமக்களின் இன்ப வாழ்வைக் கெடுக்க சாதகமாய் இருந்த அந்தக் குரலின் ஓசை, பழங்குடி மக்களின் வாழ்க்கையில் அஸ்தமனத்திற்குப் பாடிய ஒப்பாரி, அமுதகானம் என்ற பெயரிலே இசைத்த அபஸ்வரம் அந்த ஊளையிடலை, ஒப்பாரியை உபயோகமற்ற கூச்சலை அடக்கக் கிளம்பிய அறிஞர்கள் எவ்வளவோ பிரசாரங்கள் நிகழ்த்தினர். ஆனால் ராமாயணத்தைப் பொறுத்தவரையில்

அந்தப்பிரசாரம் நிழலோட்டம்தான் போட்டது. அந்த நிழலோட்டத்தைக்கண்டு பொங்கி யெழுந்தார் நடிகவேள் உயர்திரு ராதா அவர்கள். வெற்றி காணமுயன்றார். அந்த முயற்சியின் பலன் ராமாயணத்தில்புதைக்கப்பட்ட உண்மைகளை கண்டுபிடித்து நாடகமாக்கப்பட்டது. நாட்டிலே மக்களின் நன்மதிப்போடு உலவுகிறது.

அந்த ராமாயணத்தின் தன்மை யென்ன. தெய்வீகத் தன்மை யென்று புகழப்படும் அந்தக் காவியத்தில் உண்மையை எந்த அளவு உபயோகித்திருக்கிறார்கள். அக் காவியத்தில் வரும் பாத்திரங்களின் தன்மை யோக்கியதைஎன்ன எடை உள்ளது என்று அவர் உள்ளத்தில் போட்டிருக்கும் திட்டத்தை இந்த ராதாவும் ராமாயணமும் என்ற நூலின் மூலம் படம் பிடித்துக் காட்டுகிறேன். உண்மையை எடுத்துரைக்கத் துணிந்து வெளியிட்ட இந்தச் சிறுநூல் எல்லா தமிழ் மக்களின் கரங்களிலும், இல்லங்களிலும், ஆதரவு பெற்றுத் தவழும் என்று நம்புகிறேன்.

இரா. பழனிச்சாமி.

ராதாவும், ராமாயணமும்.

உலகம்!

உலகம் ஒரு ஆடம்பரவாதி. சமத்துவத்திற்கு சாம் ராஜ்யமாய் இருந்த அது நாகரீகத்தின் மேல் மோகங் கொண்ட பெண்ணாக மாறிவிட்டது. அந்தப்பெண் காட்டு மிராண்டித்தனமான தன் வாழ்க்கையை மாற்றியமைக்க குரங்கை மனிதனாக்கிக்கண்டாள். அவனுக்கு நல்லறிவு கொடுத்து தன்னை நாகரீகத்தின் பிறப்பிடமாக கருத்தைக் கவரும் கண்காட்சி சாலையாக ஆக்கிக்கொண்டாள். தான் அழகுபெற சிலரை வாழ்த்தி பலரைத்தாழ்த்தினாள் பளிங்கு உள்ளம் படைத்த அந்தப் பெண். அவள் ஏழைகளுக்கு மாற்றாந்தாய். வஞ்சகத்திற்கு வாழ் வளித்தாள். அதனால் வதைக்கப்பட்டோரின் எலும்புக் கூடுகளையும் நடமாடக் கண்டாள். அன்று அரசியல் இல்லை அது உலவும் அரண் மனைகள் இல்லை. கூட்டம் கூட்டமாக சேர்ந்து தொழில் செய்து வாழ்ந்த காலத்திலேயே தொழில் ரூபத்திலேஉயர்வு தாழ்வு உண்டாக்கி தான் வளர்த்து வந்த சமத்துவத்திற்கு இயற்கையின் உதவியைக் கொண்டு அவளே சவக் குழி தோண்டினாள். கயமைக்கு கண்ணியம் என்ற மாறு பெயர் வைத்தாள். அதனால் கல்லறைகளைக் கோடிக்கணக்கில் தாங் கவும் தயங்கியவளல்ல அவள்.

இயற்கை !

மனிதனை உலகம் விரும்பிய வழிகளிலெல்லாம் இழுத் துச் சென்றிருக்கிறது. உலகத்தை அழகு மயமாக்க

இயற்கை தன்னையே தியாகம் செய்திருக்கிறது என்றாலும் மனிதன் தன்னை அழகுபடுத்த வேண்டுமென்று விரும்பிய போது அதற்கு வேதாந்தசாலை அமைக்க மனிதன் முயற்சி செய்த நேரத்திலே இயற்கையும் அதற்கு ஒத்துப்பாடியது. சில இடங்களில் இயற்கை தன்னிச்சையாக சிருஷ்டித்தவை களையும் மனிதன் உபயோகப்படுத்தி மக்களின் அறிவுக்கு திரைபோட கதைகளைத்தீட்டியிருக்கிறான். ஆனால் இயற்கை யிடம் ஒரே ஒரு நல்ல குணத்தை நம்மில் யாரும் பாராட்டா மல் இருக்க முடியாது. மக்கள் சமுதாயத்தை எய்க்கக்கிளம் பியவனுக்கு சாதகம் செய்துவந்தாலும் சமயம்நேர்ந்தபோது அது மக்கள் சமுதாயத்திற்குப் பாதகம் செய்ததில்லை. இயற்கையின் குணங்களே ஓர் அலாதி. பசுவிடம் பாலை ஒப்படைத்தாலும் கொட்டும் ஈ யிடம் தேனை ஒப்படைக்கா மலில்லை. பாம்பிடம் விஷத்தை ஒப்படைத்தாலும் மனிதனுக்கு அதை ஆட்டிப்படைக்கும் தன்மையை அது அளிக்காமலும் இல்லை. அய்யா பழைய துணி குடுப்பாரா அதற்கும் தலையாட்டல் அய்யா கஞ்சப்பிரபுவா அதற்கும் தலையாட்டல். இப்படி உருமிக்காரனின் உருட்டல் மொழிக் கேற்றவாறு மாடுபோல்தலையசைக்கும் இயற்கையின்நிலையை யும் ஒரே இனத்தில் பிறந்து பிறந்த இனத்திற்கே துரோக மிழைத்த சுயநலம்பிடித்த மனிதனையும், அவனைத் தன் மடியி லிட்டு மகிழ்ச்சி ஊட்டி வளர்க்கும் உலகம் தன்னுள் அடக் கிக்கொண்டிருக்கும் உண்மைகளை எடுத்து வெளியிட வந் தான் ஒருவன்! தனிமனிதன்! உலகத்திற்கு முன்பிருந்து வாழுகிறவன் தொன்று நிகழ்ந்ததனைத்தும் உரைத்திடும் சூழ் கலை வாணர்களும் இவன் என்று பிறந்தான்? என்று கண்டு பிடிக்கமுடியாத ஒரு அதிசயப்பிறவி! அவன் தான்........

கால தேவன்!

உருவமில்லாதவன்; ஆனாலும் உண்மைகளைப் பாதுகாப்

பதில் அவனுக்கு நிகர் எவருமில்லே. பெரியார்கள் மத்தியிலே பெரும் புகழ் கொண்டவன் அறிஞர்சபையிலே ஆரம் சூட்டப்பட்டவன் உண்மையைப் புதைத்து உண்டாக்கப் பட்ட எத்தனேயோ கல்லறைகளேக் கண்டிருக்கிறுன். உடைத்து மிருக்கிறுன். அதே கல்லறையில் கயமையை கண்வளர வைத்துமிருக்கிறுன். அவன் வஞ்சகத்தின் பிறவிப் பகைவன். வேதங்கள் தீட்டிய கரங்களே அவன் பார்த்திருக்கிறுன். சாத்திரங்கள் உண்டானது ஏன் என்ற கேள்வியை மக்களுக்குத் தூண்டி சான்று கேட்க வைத்திருக்கிறுன் அவன் வந்த நேரத்திலே

இருபதாம் நூற்ருண்டில் மாறுகிறது இதிகாசம் !

காலதேவன் கண்ட கனவு பலித்துவிட்டது. விந்தியத் திற்கப்பாலிருந்து வருகிறது வீறிட்டலறும் ஓர் அழுகுரல். காலதேவன் கயவர்களின் மேல் தொடுத்தப்போர் வேங்கடத்தின் உச்சியிலே வெற்றிக் கொடி நாட்டியது. கொள்ளேக் கூட்டத்தலேவன் குணம் மாறி ஞானியாஞன். தன் வரலாற்றிலே வாள் பிடித்தான் என்பதற்கே இடமில்லாத, இடம் கொடுக்காத ராமன், போர்வீரர் வரிசையிலே பெரும் இடம் பிடித்து விட்டான் என்ருல் அடுக்குமா என்றது தமிழகம். அதற்கு ஆராய்ச்சியுரைக் கோர்த்து ராமனேப் பற்றிய உண்மைகளே நாடகருபத்திலே காட்டிவிட்டான் ராதாவின் ரூபத்திலே வந்த இருபதாம் நூற்ருண்டின்காலதேவன். அவனின் அறிவுப் பணியிலே, ஆராய்ச்சித்திறனிலே நடந்தது என்ன. இருபதாம் நூற்ருண்டில் மாறுகிறது இதிகாசம்.

எது உண்மை ?

சிந்துவெளிப் பிரதேசத்திலே சிருஷ்டிக்கப்பட்ட வேதங்களின் துணேகொண்டு யெழுந்த எத்தனேயோ பொய்

கதைகளில் ராமாயணக் காவியமும் ஒன்று. அடிமையின் ஜாதகத்தைத் தீட்டப்பட்ட அந்த நாளிலே அவை நிரந்தர மாக்கவேண்டுமென்ற எண்ணத்தோடு எழுதியதையும், அந்த ஆபாசத்திற்குப் போட்ட அழகுத் திரையையும் மக்களுக்கு விளக்கிக் காட்டுகிறார் தோழர் ராதா அவர்கள் தன் எண்ணத்தை என் எழுத்துமூலமாக உங்கள் சிந்தனை மண்டபத்திலே சிறந்தது என்று போற்றப்படும் அந்த ஏடுகளை திறந்து வைக்கிறார். படித்துக் கூறுங்கள் உங்கள் பகுத்தறிவின் பதிலை. எது உண்மை?

விவேகமா? விபச்சாரமா?

இச்சவாகு வம்சத்தின் இணையில்லா ஜோதி. அந்தணர் புகழும் அயோத்தி மன்னன் தசரதன். அவன் ஆசை மனைவிகளான கோசலை, கைகேயி, சுமத்திரை ஆகிய மூவரையும் தவசிரேஷ்டர்களுக்கு தாரை வார்த்தான். வெட்டுண்ட குதிரைகளோடு கட்டிப் புரளச் செய்தான். அப்பா என்றழைக்கும் அழகிய குழந்தைகளைப்பெற, சக்தியைவணங்கும் அந்த சாந்தமூர்த்திகளால் பெண்மை சூரையாடப்பட்டது! வேதம் விளக்கம் கூறியது; அதற்கு சாத்திரம் சான்று காட்டியது. அப்படியானால் வேதம் விவேகத்திற்கா? விபச்சாரத்திற்கா?

இமயமா? குன்றா?

மானிலத்தை ஆளும் மன்னனின் மனைவிகளுக்கும் தன்னைவெறுத்தத் துறவிகளுக்கும் பிறந்த ராமனையும் லக்ஷ்மணனையும் வில்வித்தையில் தேர்ச்சியுறச் செய்தனர். பிறந்த நான்கு குழந்தைகளில் இவர்கள் முதன்மையானார்கள் ராமனும், லக்ஷ்மணனும் தன் தந்தையின் சாம்ராஜ்ய வெறிக்

காக தென்னாட்டை முற்றுகையிடக் கிளம்பினர். அங்கே மண்ணாசைக்கு தந்தை சொல்லைக்காத்தவன் என்ற மறை வுத்திரைபோடப்பட்டது. காஷாய வேஷத்திலே கானகத்தை அடைந்தவர்கள் மதுவையும்மாமிசத்தையும் தங்கள் மகத்தான உணவாகக் கொண்டனர். யாகத்தைக் காட்டி மக்களின் மோகத்தைப் பெற்றனர். எதிர்த்தவர்களுக்காக உபயோகிக்கப்பட்ட அம்புகள் எத்தனை எத்தனையோ? அடுக்காது என்றவர்களுக்கு அவதாரத்தின் திருவிளையாடல் என்று ஆறுதல் கூறினர். இதுவா அவதாரமூர்த்தியின் திருவிளையாடல். இப்பேர்ப்பட்ட அவதாரமும் அவனிக்குத் தேவையா? இவைகளை வைத்து ஆராய்ந்தால் ராமனின் குணங்கள் இமயமா? குன்றா?

உடைபட்ட சங்கு ஓங்காரமிடாது.

புதுமைப் பொங்கி வழியும் பருவப் பூஞ்சோலையில் இளமையின் எழிலுக்கு எடுத்துக் காட்டாக விளங்கிய காமவல்லி கானகத்திலே ராமனை சந்தித்தாள். அதிசயித்தாள். ஆச்சரியம் அவள் இதயத்திலே ஆட்சி புரியத் தொடங்கியது.

அவள் தண்டகாரண்யத்தின் அரசப் பிரதிநிதி. தன் அவைக்களத்திலே எத்தனையோ ஆண் மக்களை அன்றாடம் சந்திக்கிறாள். தினவெடுக்கும் தோள்கள். வாள் பிடிக்கும் கரங்கள். நேர்மை நெளிந்தாடும் நெஞ்சம் அதுவே கருணையென்ற கட்டுப்பாட்டிலே அமைந்த அன்பின் அரண்மனையாகவும் வீரமும், விவேகமும் அவர்களின் வடிவத்தின் உள் கருத்தாகவும் கண்டிருக்கிறாள் ஆனால் முல்லை முறுவலிலே மோகனப் பார்வையிலே கமலமெனப் போற்றும் கண்ணின் அமைப்பிலே கொடியெனத் தவளும் கரங்களின்

நெளிவிலே அன்பும் அறமும் கொண்டு இல் வாழ்க்கை நடத்தும் பெண்ணைக் கண்டிருக்கிறாள். அந்தப் பெண்ணின் அழகு படைத்த ஆணைக் கண்டதில்லை. அந்த முறையில் அன்றுதான் ராமனைக் கண்டாள். அந்த சந்திப்பு காமவல்லிக்கு ராமனின்மேல் காதலை உற்பத்தி செய்கிறது. அதனால் எதிர் காலத்தில் தமிழகத்தைச் சாக்காடாக்கி அந்த சாக்காட்டின்மேல் சாம்ராஜ்யம் அமைக்க வந்த சதிகாரன் ராமன் என்ற எண்ணம் அந்த ஏந்திழையின் உள்ளத்தில் உருவெடுக்கவில்லை. கருத்தை வெளியிட்டாள் காகுத்தனிடம். ஆரியத் திராவிடப் போராட்டம் வேண்டாம். அன்யோன்யமாகப்பழகும் புதிய சமுதாய அமைப்பை உண்டாக்குவோம் என்று எடுத்துக் காட்டும் முறையில். ராமனின் நெஞ்சமும் காமவல்லியின் கட்டழகைப்பற்றிதான் ஆராய்ச்சி செய்தது. ஆனால், சீதையின் சீற்றம் அவளின் சிங்கப்பார்வை அவனின் சிந்தனைக்கு முன் நின்று பயமுறுத்தியது. அதைக்கண்டு நடுக்கங்கொண்ட ராமன் தன் தம்பி லக்ஷ்மணன் தனியாக வந்திருக்கிறான். நீ அவனை மணந்துகொள் என்று அனுப்பிவைக்கிறான் காமவல்லியை.

(ஆரியர்கள் வேதத்தில் ஒரு பெண் தன் கணவன் இல்லாவிட்டால் கணவனுடன் பிறந்தவர்களுடன் கூடி இன்பம் பெறலாம் என்றிருப்பதால் பரதனுக்குத் துரோகச் சிந்து பாடிய ராமன் லெக்ஷ்மணனின் வாழ்க்கையில் கோணல் ஏற்படுத்தலாம் என்ற குணத்தை மேற் கொண்டான்போலும்)

காமவல்லி லக்ஷ்மணனிடம் நயமாக விஷயத்தை வெளியிட்டாள். காதல் என்பதற்குப் பொருள் தெரியாத அந்த முரடன் அவள் அங்கங்களை சிதைத்து விடுகிறான்.

ஆசைப்புகை அறிவுக் கண்களுக்குத் திரையிட்டதால் மோசம் போனேம் என்ற முனகலுடன் அந்தவாசமலர்க் குவியல் தன் வாழ்வை முடித்துக் கொள்ளுகிறுள்.

இங்கே காதலுக்குக் கருத்து விளங்காதவனின் கலப்பு மணத்தின் தன்மை உணராத இன வெறியனின் ஈனச்செய வினை வதை புரிந்தது பொருத்தம். இது மேதையின் குணங்களில் மேம்பாடு என்று முரசு கொட்டுகிறுர்கள் மூளையை ஒதுக்கி வைத்தவர்கள். அந்த நீதிமான்களுக்குச் சொல்லுகிறேம். கலப்புமணம் களங்கமில்லாத ஓர் புதிய சமுதாய அமைப்பை சிருஷ்டித்துக்காட்டும் சாதனம். காதல் பகையறிந்து பிறப்பதில்லை. அந்தப் பாதையிலே சென்றுள் காமவல்லி. அவனுக்குப் பிடிக்கவில்லை யென்றுல் மறுப்பது கண்ணியம். மானபங்கப்படுத்துவதுமதியீனம். ஆகையால் மதிகெட்டவனுக்கு மலர்மாலை சூட்டாதீர்கள். உடைபட்ட சங்கு ஓங்காரமிடாது.

தென்றல் மாறியது புயலாக.

தெற்கே உலவிக் கொண்டிருந்த தென்றல் வடக்கு நோக்கிப் புயலாகப் பாயத்தொடங்கியது. இலங்கை மக்களால் அன்பும் அறமும் அவனின் அணிகலன் என்று புகழ்ப்பட்ட ராவணன் அரக்கன் அயோக்கியன் என்று வடநாட்டு மக்களால்தூற்றப்பட்டான். காரணம்? வேதமும் வேள்வியும் விஷப்புகையைக் கிளப்பி வெகுளிகளின் உள்ளத்திலே வேதாந்தப்போதையை ஊட்டியது. ஆடு, மாடுகளை யாகத்தின்பேரால் பலியிடுவது விலங்குகளுக்காக மனிதனல் சிருஷ்டிக்கப்பட்ட அம்பு உண்டாக்கியவன் உடலிலேயே ஊடுருவத் தொடங்கியதுதான். இந்த நேரத்தில்தான் வந்தது தங்கை தாக்கப்பட்டாள் என்ற செய்தி. அலறினன்

ராவணன் அன்புத்தங்கைக்காக, தமிழ்மரபைக்காக்க எத்த ஊேயோ போர்க்களத்தில் விளையாடி இருக்கிறன். சூழ்ச்சிக்கு பல வீரர்களை பறிகொடுத்திருக்கிறன். ஆனல் அந்தச்சூழ்ச்சி யில் பெண்களும் பலியாகிறர்கள் என்றதும் பொங்கியது அவன் மனம். துடித்தெழுந்தான். அடுத்தக் கணம் அவனின் வீரவாள் உறைவிட்டு வெளியேறி ராமன் உடலை ருசி பார்க்கத் தயாராகியது, அந்தக் கத்தியின் பளபளப்பு அவன் வீரத்தின் பிரகாசத்தை எடுத்துக் காட்டியது நர நரவென ஆத்திரத்தால் எழுந்த அவன் பல்லின் நெறியோசை, ராமன் வாழ்க்கை மரம் சாயும் சப்தத்தை சிருஷ்டித்தது. அடக்கி மாரிசன் அடுத்ததொரு வழி எடுத்துரைத்தான். அரச மரபுப்படி ராமன் தன்னிடம் மன்னிப்புக் கேட்க வேண்டு மென்று எண்ணி சீதையை சிறை எடுத்தான். மாரிசன் கொல்லப்பட்டான் ராமனல்வஞ்சகமாக. சீதையைக்காணுது தவித்தான் ராமன், அதுவரை ராமனின் வாழ்க்கையில் தென்றலாக உலவிவந்த சீதை, பிரிவால் அவனையே தாக்கும் புயலாக மாறினள்.

கருடனின்கனைப்பு, குயில்களின்பின்னணியிசை!

சீதை இலங்கையிலே, ராவணன் மாளிகையிலே. இது ராமனின் உள்ளத்தைக் கசக்கிப்பிழியும் செய்தியாக இருந் தது. தங்களின் பிரதமரான ராமனுக்கு துன்பம் நேர்ந்தது என்று கேள்விப்பட்டதும் சாமியார்களின் சட்டசபைக் கூடியது. மாமுனிகளான மந்திரிகள் மந்திராலோசனை செய் தார்கள். அவர்களின் ஏகமனதான தீர்மானம் ராமனுக்கு கிட்கிந்தைக்குப் பாதை காட்டும் கைகாட்டியாகஅமைந்தது. துரோகிகள் கூட்டத்தைத்தேடி பிரயாணத்தைத் துவக்கி னன் ராமன். கிடைத்தார்கள். சுக்ரீவன் சுருதிபோட

அனுமன் அவதாரத்தைப் புகழ்ந்து அகவல் பாடினன். அப்போது எங்கிருந்தோ கருடன் கனைத்தது; மாந்தோப்பிலிருந்த குயில்கள் அதற்குப் பின்னணியிசை முழங்கின.

அவதாரம்செய்த அநியாயக்கொலை !

பட்டம் இழந்து தவித்த பதவிப்பித்தன் சுக்ரீவனுக்கு பதவிப் பீடமளிக்க வாலியை மறைந்து நின்று கொல்ல உறுதியளித்தான் ராமன். பதவி ஆசை சுக்ரீவன் இதயத்திலே இருந்த பாசத்தையும் சுட்டெரித்துவிட்டது. தம்பியும், தமையனும் தனிமையிலே மற்போர் செய்யும் போது மறைந்துநின்று வாலிக்குகணைதொடுத்து அடித்துவிடுகிறான் ராமன். எங்கே போர் தர்மம்? வேடன் புலியின் பாய்ச்சலுக்குப் பயந்து மறைந்து நின்று கொல்லுவதைப் போல் ராமனும் வாலியை மறைந்து நின்றே வதைத்தான் என்றால் வாலி குரங்கு இனத்தைச் சார்ந்தவன் ஆகையால் மிருகத்தை மறைந்து நின்றுச் சாடுவதுதான் மாண்பு என்று மழுப்புகிறார்கள். யார் குரங்கு? அரசியலைக் கற்று அந்தஸ்த்துடன் வாழ்ந்தானே அவன் குரங்கா? நாட்டைநிர்வகிக்கும் நல் ஆட்சித் திறனிலே கோட்டைக் கொத்தளத்திலே குதூகல வாழ்விலே இருந்தானே அவனா குரங்கு? குரங்குக்குப் பேசும் தன்மை அளித்த பிரமன் யார்? இப்போது அந்த பிரமன் பதவியை காலி செய்ததால் அந்த ஸ்தானத்தில் வேறு பிரமன் உட்கார்ந்து படைக்கும் தொழிலை செய்கிறானா. குரங்கு என்பதற்குக் கொடியை ஆதாரம் காட்டும் குணசீலர்களைக் கேட்கிறேன். உங்கள் இரண்டாவது இதிகாசத்திலே உயர்ந்தவர்கள் என்று போற்றப்படும் பஞ்சபாண்டவர்களின் கொடியின் சின்னமென்ன? அதே குரங்குதானே! அவர்களை மட்டும் எப்படி

மனிதன் என்று ஒப்புக்கொள்ளுகிறீர்கள்? கம்பனின் கருத்தை கடவுளின் திருவாக்கு என்று போற்றும் கனதனவான்களே உங்கள் சிந்தையைநிலைநிறுத்திச் சொல்லுங்கள். இலங்கையிலே ராவணனின் இனம் அயோத்தியிலே ராமன் பரம்பரை என்றால் நடுமத்தியிலே வாழும் நாம் அன்று இங்கில்லையா அல்லது நம் முன்னோர் நடோடிகளா. பேடியைப் பெரும்வீரன் என்று தீட்டிவிட்டோமே என்று திரித்தான் கம்பன் கற்பனையை. வாலி குரங்கானதால் மறைந்து நின்று வதைத்தான் என்று பாடினன். அது ராமனின் கோழைத்தனத்திற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்து விட்டது. சுக்ரீவன் மனைவியை வாலி கவர்ந்ததனால் கொல்லப்பட்டான் என்று காரணம் காட்டினர். இது பொய் முலாம். உண்மையில் ராமன் நியாயவாதியாய் இருந்தால் உண்மைக்கு அவன் உள்ளத்தில் ஒரு ஓரத்திலாவது மதிப்பளித்து வைத்திருந்தால் கூட்டப்பட்டிருக்க வேண்டும் ஓர் அறிஞர்குழாம். அந்த அவைக்களத்திலே விசாரணை மண்டபத்திலே நீதி சரிசமமாகப் பங்கிடப்பட்டிருக்குமானால் வாலியின் மனைவியை கவர்ந்த சுக்ரீவன் தன் அண்ணனைக் குகையிலடித்துக் கொல்லப் போட்ட திட்டங்கள் வெட்ட வெளிச்சமாயிருக்கும். அந்த அறிஞர் சபை சற்று சென்ற காலத்தை சிந்தித்திருக்குமானால் அங்கே ராமனைக் குற்றவாளியாக்கத் தாடகை தோன்றியிருப்பாள். சுபாகு சாக்ஷிக் கூண்டிலே நின்றிருப்பான் காமவல்லிக் கண்ணீர் குளத்திலே நீந்திய காகுத்தனின் (ராமனின்) கைகளுக்கு இருப்புச் சங்கிலியே போட்டிருப்பார்கள் ஆனால் நடந்தது என்ன? ராமன் போர்முறைக்குப் புரம்பாக நீதிக்கு மாறான பாதையிலே நின்றான். வாலியின் வாழ்வை வஞ்சம்விழுங்கிஏப்பமிட்டது. இது அவதாரம் செய்த அநியாயக் கொலை.

கரையான் புற்றுக்குள்ளே கருநாகம்

இதுவிந்தையல்ல. சரித்திரம் சங்கடத்துடன் தாங்கிய எத்தனையோ வரலாறுகள் கண்டிருக்கிறோம். அதே வரலாறு தமிழ் சரித்திரத்தின் ஏட்டுச் சுவடியிலே உதயமாக ஆரம்பித்தது, சுக்ரீவன் நெஞ்சமும் விபீஷணனின் இதயமும் ஒன்றாகக் கலந்தது, பதவிக்காகப் பண்பையே புதைத்து ராமனின் காலடியை தஞ்சமடைய எண்ணி தமையனையே எதிர்த்து நின்றான் விபீஷணன். மேகநாதனின் கரங்கள் வாளைப்பிடித்தன. கும்பகர்ணன் அந்த துரோகியின் நெஞ்சைப்பிளந்து அதில் வழியும் ரத்தத்திலே வஞ்சக வரலாறு வரைந்து விட்டான் மனக்கண்முன்னே. விபீஷணனுக்கோ ரத்னசிம்மாசனம், ராமனின் காலடி இதைத்தவிறவேறு ஒன்றும் புலப்படவில்லை, ராவணனோ அன்பைக் காட்டியவனிடம் ஆத்திரத்தைக்கொட்ட முடியாமல் திகைத்தான். ஓடினான் விபீஷணன் ராமனின் காலடியைநோக்கி. பட்டங்கள் பல வழங்கப்பட்டது. அந்தப்பட்டங்களைக் கண்டு மயங்கிய விபீஷணனுக்குத்தான் இனி இலங்கையின் மணிமகுடம் என்றதும் தன் அண்ணனைக்கூட காட்டிக்கொடுப்பதாக வாக்களித்தான். கரையான் புற்றுக்குள்ளே வாழ்ந்திருந்த அந்த கருநாகம்.

அந்தோ தமிழகமே

துரோகம் துதி பாட, சூழ்ச்சி சுருதி போட, அவதார மென்ற அரியணைமேல் ஆனந்தமாக அமர்திருந்தான் ராமன். அவன் குள்ளநரிக் கூட்டத்தின் தலைவன் தான் என்றாலும், போர் என்ற சொல் நாகத்திற்கு கேட்ட இடி ராமனைப் பொருத்த வரையில், எந்தப்பாதையிலும் தனியாக செல்லப் பயந்திடும் ராமனுக்கு, விபீஷணன் தைரியம் கூறிக்

கொண்டே இருந்தான். நற்குடியில் பிறந்து நயவஞ்சகர்களுக்கு ஏவலாளர்களாக இருக்கும் எத்தர்களின் பித்தலாட்டம் ஸ்வரூபம் மாறி போராக உருவெடுத்தது. நடந்தது போர். இலங்கையின் வீரத்திற்கு எடுத்துக்காட்டுப் பாடமாக அமைந்துவிட்டது, முதல்நாள் யுத்தமே.... நேரிய முறையில் போர்பயிற்சிபெராத அந்தகுரங்குபுத்திபடைத்தவர்களின் குறுக்குவழியில் கும்பகர்ணனும் இந்திரஜித்தனும் கொல்லப்பட்டனர். மறைந்துநின்றுவிட்டஅம்பு மறத்தமிழ் வேந்தன் ராவணனின் வாழ்வுக்கு முடிவு கூறுகிறது. தான் காணும் கடைசி கண்காட்சிசாலையாக அவன் தமிழகத்தைக் கண்டான். அதேநேரத்தில் இங்கே சுரண்டப்படும் முத்துக்களும், நவரத்தினங்களாகியப் பொருள்கள் பாலைவன வடநாட்டை அழகுபடுத்துவதைக் கற்பனைசெய்து பார்த்தான். அவன் இதயத்தின்மேல் வேங்கடமே பெயர்ந்து விழுந்தது போல் இருந்தது. அந்தோ தமிழகமே என்று அனுதாபம் கூறிக்கொண்டே பிரிந்தது ராவணனின் ஆவி.

பத்தினியா? பரத்தையா?

ராவணனுடன் பத்து மாதங்கள் சீதை சல்லாபித்துக் கொண்டிருந்திருக்கலாம்என்றுசந்தேகப்பட்டராமன்அவளை தீக்குளித்தால்தான் பத்தினி என்று ஒப்புக்கொள்ள முடியும் என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டான். சீதை தீயில் இறங்கினால் இறந்து விடுவாளே என்று ஒருவனை அக்கினி பகவான் என்று அவதாரப்போர்வை போர்த்தி சீதையைக் கற்புக்கரசி என்று கதைகட்டி விடுகிறார்கள் அனுமனும், விபீஷணனும். அங்கே சீதையின் கற்பு எப்படிப்பட்டது என்ற ஆராய்ச்சி ரகசியமாக வைக்கப்படுகிறது பின் பட்டாபிஷேகம் முடிந்து பரவச வாழ்வு நடத்தும் சமயம்

எழுந்தது ஒரு புயல். சீதைக்கு வயிற்றிலே நாலு மாதம் ராவணனால் உண்டானது என்று ரகசியம் பேசியது ஊர் கூட்டம். ஊர் மக்களின் தூற்றுதலுக்குப் பயந்து பரிசோதித்தான். சீதையை உண்மை அவனுக்கு விளங்கிவிட்டது விரட்டினன் காட்டிற்கு. தம்பியையும் உடன் அனுப்பினன் தன் மனைவியை கொன்று வரும்படி.... இப்போது நாம் அவதாரத்தின் செயலைக்கொண்டே தீர்மானிப்போம். சீதையைப்பற்றிய அவன் எண்ணம் எப்படியிருந்தால் காட்டிற்கு அனுப்பியிருப்பான். தன் ஊடலிலே கருதரிக்காத சீதை கணவனின் துணையில்லாத நேரத்திலே கருதரித்திருக்கிருளென்ருல், வேறு ஆடவனின் துணையின்றி முடியுமா? அந்த உண்மையை வைத்து ஆராய்ந்தால் சீதை பத்தினியா? பாரரியா?

இதுவா ராமராஜ்யம்?

தவம் பிராமணர்களுக்கு உரிமை ஸாஸனம் செய்யப் பட்டது. சூத்திரன் செய்கிருனே என்று ஆத்திரங் கொண்ட பிராமணர்களுக்காக சம்பூகனைக்கொன்ருன் மன்னன் ராமன். பிராமணர்களின் சூழ்ச்சி பலித்தது. நீதி வீழ்த்தப்பட்டது. நேர்மை புதைக்கப்பட்டது. சட்டம் என்றபெயரில் சண்டாளத்தனம் சதிராடுகிறது. இதுவா ராமராஜ்யம்?

வால்மீகி வழுக்கி விழுந்த பாறை

கானகத்திலே வால்மீகி முனிவரின் ஆதரவிலே இருந்த சீதைக்குப்பிறந்த இரு குழந்தைகளான லவ குசர்கள் ராமன் நடத்திய அஸ்வமேதயாகத்தின்போது ராமனின் இழிவுகளை எடுத்துப் பாட ஆரம்பித்தனர். ராமன் ஆத்திரம் கொண்டான். கொதித்தத் தன் குழந்தைகளுக்குக் குளிர்ச்சி

மொழி கொடுக்க வந்தாள் சீதை. இரு சிறுவர்களும் சீதையின் குழந்தைகள் என்றறிந்த ராமன் தனித் தனியாகப் பிறந்தவர்கள் இருவரும் என்று கேள்விப்பட்டு• சீதை சந்தேகிக்கவே அவசியமில்லாத விபச்சாரி என்று முடிவு கட்டுகிறான். வால்மீகி பொறுமை போதிக்கிறார். வால்மீகியாரை நோக்கி இரண்டாம் குழந்தையின் பிறப்புக்குக் காரணம் கேட்ட ராமனின் கேள்விக்கு துரும்பிலே உண்டாக்கினேன் என்று பொய் முலாம் பூசுகிறார் வால்மீகி. அப்படியானால் எங்கள் முன்னர் துரும்பிலே குழந்தையை உண்டாக்கும் என்ற ராமனின் இரண்டாவது கேள்வி வால்மீகியாரை திணறவைக்கிறது. பாவம் உண்மையில் அவர் துரும்பிலே குழந்தையை உண்டாக்கும் மந்தரங்களைத் தெரிந்துவைத்திருந்தால் தானே. அப்படி ஒரு மந்திரம் இருக்கிறதா என்று அவருக்கே சந்தேகம். இந்த நிலையிலே ராமனின் முன் மௌனமாக சிலையைப்போல் நிற்பதைத் தவிற அவருக்கு வேறு வழி புலப்படவில்லை. சீதை விபச்ாரிதான் என்று திட்டவட்டமாக ஆதாரபூர்வமாக உணர்ந்த ராமன் அவளை கழுத்தை நெறித்துக் கொல்லுகிறான். ராமன் சீதையை விபச்சாரி என்று நினைத்தது தவறு என்று யாராகிலும் ஆதார பூர்வமாகக் காட்ட முடியுமா. என்னதான் பக்தர்களும் வேதாந்திகளும் அவர்களின் அடிச்சுவட்டைப் பின் பற்றும் புலவர்களும் கற்புக்கரசி சீதையென்று கர்ஜித்சாலும் இந்த ஒரு சம்பவம் அவளை ஒரே வார்த்தையில் சித்தரித்துக் காட்டிவிடுகிறது. அந்த வார்த்தைதான் வால்மீகி வழுக்கி விழுந்த பாறை.

இதிகாசத்திலே ஒரு கடைசி ஏடு

தாயைக் கொன்றவனைப் பழி வாங்க தனையர்கள் துரத்தினர். ராவணனின் பரம்பரை வால்மீகியின் வம்சவழியில்

வந்தவர்களுக்குப் பயந்து தன் தம்பி லக்ஷ்மணனுடன் சரயு நதியில் விழுந்து இறக்கிறான் ராமன். இதுதான் பகுத்தறிவுச் சிங்கம் ராதா அவர்கள் சொல்லும் பகிரங்கக் கதை. தோழர் ராதா அவர்கள் எழுப்பிய இந்த உண்மை இதிகாசத்திலே, தவறைக் கண்டு பிடிப்பவர்களின் வாதம் தகுமா என்று சிந்தியுங்கள். எழுதுங்கள், எங்களுக்கல்ல. உலகத்திற்கு. உங்கள் விமர்சனங்களை ஏந்தக் காத்திருக்கிறது. தற்கால ராமாயண இதிகாசத்திலே ஒரு கடைசி ஏடு.

ராதாவுக்கு ராமனின் வாழ்த்து !

நாட்டிலே புரட்சி. ராமாயணத்திற்குத் தடை. பத்திரிகைகள் அலறியது. பெரியார்கள் சீறி எழுந்தார்கள். பார்ப்பனர் கூட்டமோ பரவசத்தை தங்கள் வீட்டிலே அடைத்து வைத்துக்கொண்டு அனுபவிக்க முனைந்தார்கள். ராதா ஆரம்பித்த எதிர்ப்பு அவர் கட்டிய புதிய ராமாயணக் கோட்டை தடையென்ற பீரங்கிகளால் தகர்க்கப்பட்டது என்று தாங்கொணு மகிழ்ச்சி கொண்டார்கள். ஆனால் ராதாவின் இதயத்திலே கட்டிய அந்த ராமாயணக் கோட்டை தகர்க்கப்படவில்லை தகர்க்கு மளவு எந்த வெங்கண்ணுக்களுக்கும் விஷயங்கள்-ஆதாரங்கள் அகப்படவில்லை. இருந்தாலும் வெத்து வேட்டுத் துப்பாக்கியை வைத்துக்கொண்டு வீரம் பேசுகிறது வீணர் கூட்டம்.

ராமாயணம் ஏரித்தண்ணீர். அதை கலக்கிக் குடிக்காதே அப்படியே அலங்காமல் அள்ளிப் பருகு என்று அறிவுரை நிகழ்த்துகிறார்கள். ஆச்சாரியார்கள் உங்கள் பாதையிலே நாங்களும் வருகிறோம். ராமாயணம் ஒரு ஏரித்தண்ணீர். ஏரிக்கு வருவதோ மழை நீர். வீதிவழியே ஓடி அசுத்தத்தையும் மண்ணையும் நாற்றத்தையும் நெளியும் புழுக்களையும் நெறி

யேறுமளவு கடிக்கும் கிருமிகளையும் கொண்ட ஓர் அசுத்த நீர். சாக்கடையை சந்தித்து வீட்டின் கூரைகளை நனைத்து அழுக்குகளையும் துர்நாற்றத்தையும் திரட்டிக்கொண்டு மக்களால் வெறுக்கப்பட்டு எங்கெங்கோ ஓடி கடைசியல் ஏரியை சரணாகதி அடையும் ஒரு துர்நீர். அந்த ஏரியின் தண்ணீரில் அழுக்கைத் தின்று உயிர் வாழும் மீனும் (ராவணனும்) இருக்கிறது. அந்த மீனின் குஞ்சுகளை விழுங்கி ஏப்பமிட்டுக் கொழுத்துத் திரியும் (ராமன்) தண்ணீர்ப் பாம்பும் இருக்கிறது நீர் வற்றினால் நீங்கா கஷ்டம் வந்து விடுமே என்று ஒட்டகத்தைப்போல் தன்னுள்ளேயே தண்ணீரைத் தேக்கி வைத்துக்கொள்ளும் சுயநலம்பிடித்த (பார்ப்பனக்கூட்டம்) நத்தைகளும் மிதக்கிறது. அதன் அடிபாகமோ வண்டல்மண். அதிலே நெளியும் கிருமிகளைக் கணக்கெடுக்கவே முடியாது. ஆகையால் அதை குடிக்கச் செய்யாதே மக்களை. அது அவர்களின் வாழ்வையே நசித்துவிடும் என்று நாங்கள் எச்சரிக்கிறோம் இது கல்லடிப்பட்டு கலங்கியவன் சொன்னதல்ல. துப்பாக்கி குண்டால் துவண்டவன் புகன்றதல்ல. பைந்தமிழன் வாழ்வு பொசுங்குவதைக் கண்டு எழுந்த **பெரியாரின்** பேரிகைஓசை தடையை எதிர்த்து தமிழனின்பெருமையை விளக்கும் தோழர் ராதா அவர்களின் **இதய முழக்கம்** இதை இப்பொழுது ராமன் இருந்து கேட்டிருந்தால் தன் எதிரியான ராவணனின் வீரத்தைக்கண்டு பயப்பட்டவன் அதிசயித்த ராமன் ராதாவின் தைரியத்தைக் கண்டு புகழ்ந்திருப்பான். அவன் [illegible] தனத்திடமிருந்து உதறிக்கொண்டு வெளி[illegible]றி யிருக்கும் [illegible] இன்னும்சொல்லப்போனால் உண்மையை எடுத்துக்காட்ட [illegible] டைப்பெடுத்த கடலின் தாக்குதலையும் சமாளித்து வெற்றி[illegible]ண்ட ராதா வாழ்க. இப்படித்தான் [illegible]க்கும் ராதாவுக்கு ராமனின் வாழ்த்து.

உயர்வின் சின்னம்

★ உற்சாகத்தின் சிகரம் ★

பிராஞ்ச் :—

தி நியூமணிலா புகையிலை கம்பேனி,

No. 15, சாரங்கபாணி கீழவீதி,

கும்பகோணம்.

பாரதி அச்சகம், குடந்தை.